குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 95/2019

அ.சா. 7

2024–ம் ஆண்டு டிசம்பர் 03–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 07–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்தி | ஜாதி | |
| தந்தை பெயர் | ஜெகநாதன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 04.23 மணி,

Accused A1. Patti Ramasamy A2.Kaliyamoorthi, present. Advocate Mr. A.Nagenthiran present for A1. Advocate Mr. Kanagaraj present for A2. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் ஆரூர் பட்டியில் குடியிருந்து கொண்டு தறி தொழில் செய்து வருகிறேன். கடந்த 14.10.2018 ம் தேதி எனது பாட்டி வெள்ளையம்மாள் தாரமங்கலத்தில் உள்ள சீனிவாச மருத்துவமனைக்கு சென்று இருந்தார். அவர் மருத்துவமனைக்கு வெளியே நின்று கொண்டு இருந்த போது ராமசாமி என்பவர் அவரிடமிருந்து செயினை பறித்துக் கொண்டுவிட்டதாகவும் அருகில் இருந்தவர்கள் அதனை கேட்ட போது அவர் கத்தியை காட்டி மிரட்டியதாக எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். நானும், கோவிந்தராஜ், ராஜு ஆகியோர் அங்கு சென்றோம். பொது மக்கள் ராமசாமியை பிடித்து வைத்து இருந்தார்கள்.

2. ராமசாமியை தாரமங்கலம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். ராமசாமி எனது பாட்டியிடம் பறித்த 2 1/2 பவுண் செயினை கொடுத்துவிட்டார். பின்பு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். தொளசம்பட்டியில் ஒரு டீச்சரிடம் 5 சவரண் செயினை பறித்ததாகவும், தொளசம்பட்டி ஒயின்சாப் முன்பு இருந்த ஒரு இருசக்கர வாகனத்தை திருடியதாக சொன்னார். அந்த பைக்கை ஓமலூரில் உள்ள தங்கம் ஸ்டேண்டில் நிறுத்தி வைத்திருப்பதாக சொன்னார். ஜலகண்டாபுரம் மெயின்ரோட்டில் அருகே

உள்ள வீட்டில் இருந்து நகையை எடுத்ததாக சொன்னார். பின்பு ராமசாமியின் நண்பரின் வீடு பஞ்சுகாளிப்பட்டியில் உள்ளதாக கூறி அங்கு அழைத்து சென்றார். அங்கு வீட்டில் இருந்த பெட்டியில் இருந்து 5 பவுண் நகையை எடுத்து போலீசாரிடம் கொடுத்தார்.

3. என்னிடம் காட்டப்படும் ராமசாமி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலம் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். **(அந்த ராமசாமி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ– 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் இது குறித்து என்னை விசாரித்தார்கள்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. நான் காவல் நிலையம் சென்ற போது எத்தனை மணி இருக்கும் என்று எனக்கு நினைவு இல்லை. எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்ததை பதிவு செய்த நபரின் பெயர் மற்றும் பதவி எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த போது நான் காவல் நிலையத்திற்கு வெளியே இருந்தேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் கையால் எழுதப்பட்டதா, தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் எனக்கு நினைவு இல்லை.

5. ஒப்புதல் வாக்குமூலத்தில் அனைத்து விபரங்களும் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. போலீசார் எதிரிகள் ஈடுபட்டுள்ள வழக்குகளை கூறிதான் எதிரிகள் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரி. எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனத்தின் பதிவெண் மற்றும் வகை தெரியாது என்றால் சரி. நான் இவ்வழக்கு தொடர்பாக எத்தனை கையெழுத்துக்கள் செய்தேன் என்று நினைவில்லை.

6. நான் எந்த எந்த வழக்குகள் தொடர்பாக கையெழுத்து செய்தேன் என்று எனக்கு நினைவில்லை. எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட நகையின் வடிவம் மற்றும் வகை எனக்கு தெரியாது என்றால் உருண்டையாக முறுக்கு செயினாக இருந்தது. தாரமங்கலம் காவல் நிலையத்தில் வெள்ளையம்மாள் என்பவர் செயின் பறிப்பு தொடர்பாக புகார் கொடுத்துள்ளார் என்றால் மேற்படி வெள்ளையம்மாள்எனக்கு பாட்டி உறவு முறை என்றால் சரி. மேற்படி வழக்கில் வெள்ளையம்மாளின் செயினை அவரிடம் திருப்பி தருவதற்கு போலீசார் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்குமாறு

நிபந்தனை விதித்தார் என்றாலும் அதற்கேற்ப நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளை மிரட்டி, அச்சுறுத்தியும் அவர்களிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் எவ்வளவு நேரம் பதிவு செய்யப்பட்டது என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரி.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

8. (2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது).

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 04.21 மணி,

ஒம்/-ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.